1972 டிசம்பர் 13]

Nylon Project.

*155. Q.—THIRU N. V. GURUSWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to establish a Nylon Project in the Vaigai Dam area in Madurai district; and

(b) if so, when it will be implemented?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் நிறுவக் கருதியுள்ள நைலான் தொழிற்சாலை மதுரை மாவட்டத்தில் தேவையான அளவு தண்ணீர், மின்சாரவசதி, போக்குவரத்து வசதியுள்ள தகுதிவாய்ந்ததொரு இடத்தில் அமைக்கப்படும்.

(இ) இத்தொழிற்சாலை 1975-ஆம் ஆண்டு இறுதிக்குள் உற்பத்தியைத் தொடங்கும் என்று தற்போதைக்கு எதிர்பார்க்கப்படுகிறது.

நெல்லை மாவட்டத்திலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்.

* 156 வினு : திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் 1971–72 நிதியாண்டிலும், 1972–73 நிதியாண்டில் இதுவரையிலும் புதிதாக எத்தனை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன ?

(இ) அதே கால அளவில் எத்தனை சங்கங்கள் மூடப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 1971–72-வது நிதியாண்டில் ஒரு சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. 1972–73-வது நிதியாண்டில் ஒன்றுமில்லை:

(இ) 1971–72-வது நிதியாண்டில் ஒரு சங்கம் மூடப்பட்டது. 1972–73-வது நிதியாண்டில் ஒன்றுமில்லை.